செய்தி வெளியீடு எண்.10 நாள்.13.01.2021

**பத்திரிக்கை செய்தி**

**கிண்டி அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் 16.01.2021 வரை நேரடி மாணவர் சேர்க்கை**

2020 ஆம் ஆண்டிற்கான அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், கிண்டியில் உள்ள **Food Production (General), Front Office Assistant, Food & Beverage Service Assistant, Plastic Processing Operator, Digital Photographer, Physiotheraphy Technician, Desktop Publishing Operator, Smartphone Technician cum App Tester , Welder (8 ஆம் வகுப்பு தேர்ச்சி), Fitter (Deaf & Dumb), Turner** ஆகிய தொழிற்பிரிவுகளில் 10 வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு வாய்ப்பு தரும் விதமாக நேரடி சேர்க்கை நடைபெற்று வருகிறது. இத்தொழிற்பயிற்சி நிலையத்தில் சேர விரும்பு தகுதியுள்ள மாணவர்கள் 16.01.2021ஆம் தேதிக்குள் இத்தொழிற்பயிற்சி நிலையத்தில் நேரடியாக பயிற்சியில் சேரலாம். அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் தகுதி பெற்ற மாணவர்களுக்கு அரசால் கட்டணமில்லா பயிற்சி, விலையில்லா மடிக்கணினி, விலையில்லா மிதிவண்டி, கட்டணமில்லா பேருந்து பயணச் சலுகை, விலையில்லா பாடப்புத்தகம், விலையில்லா சீருடை, மாதாந்திர உதவித்தொகை ரூ.750/- மற்றும் விலையில்லா வரைபட கருவிகள் என பல சலுகைகள் வழங்கப்பட்டு வருகிறது. பயிற்சி முடிவில் மத்திய அரசின் சான்றிதழ் மற்றும் வேலைவாய்ப்பும் வழங்கப்படும். மேலும் விவரங்கள் அறிய இத்தொழிற்பயிற்சி நிலைய தொலைபேசி எண். 044-22501350, 9499055649 –ஐ அணுகலாம்.

**இத்தகவலை சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி.ஆர்.சீத்தாலட்சுமி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.**

**வெளியீடு**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,**
**சென்னை-01**